**மில்லனிய பிரதேச சபை 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மில்லனிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மில்லனிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.27 முதல் 3.32 வரை குறிப்பிடப்பட்ட பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் மிகையில் ஏற்படுத்தப்பட வேண்டிய சீராக்கம் சரிசெய்யப்படாதிருந்ததுடன் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு செய்தல் ரூபா 531,808 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட ரூபா 6,171,987 ஆன 08 செயற்றிட்டங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதும் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பிழைகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினங்கள் சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2021 ஆம் ஆண்டின் போது சரியாக கணக்கீடு செய்யப்பட்ட லெனவற விளையாட்டு மைதானம் | பிழையாகக் கணக்கு வைக்கப்பட்டமை சரிசெய்யப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பாத்தக்கட சிறுவர் விளையாட்டரங்கு வலை வேலி நிர்மாணிப்பதற்காக ஏற்பட்ட மூலதனச் செலவின மானியத்தின் கூட்டுமொத்தம் ரூபா 2,461,669 மீளாய்வாண்டின் நாட்குறிப்பு இலக்கம் 06 மற்றும் 08 இன் மூலம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது மூலதன மானியமாக பாத்தக்கட சிறுவர் விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்வதற்காக கிடைத்த ரூபா 1,999,993 மீண்டெழும் செலவினமாக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | ஆயுர்வேதக் கட்டிடம் மற்றும் நூலகக் கட்டிடத்தில் வர்ணம் பூசுவதற்கு 2022 சனவரி மாதத்தின் போது மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 550,000 பழுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | செலவினங்களைச் செய்தல் குறித்துரைத்த ரீதியில் இனங்கண்டு அட்றுவாக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற மூலதனச் செலவின மானியச் சொத்துக்களின் காலக்கழிவு அளவு ரூபா 487,060 அதிகரித்தும், மீளாய்வாண்டிற்காக பாத்திரங்கள் மற்றும் உபகரணங்களின் காலக்கழிவு ரூபா 415,785 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியான பெறுமதியை இறுதிக் கணக்குகளில் சீராக்குதல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் | | | |
| (i) 127 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 26 மயான நிலங்களை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022.06.21 இல் களுத்துறை சிரேஷ்ட நில அளவையாளர் அதிகாரிக்கு பணம் செலுத்தப்பட்ட போதும் இதுவரை அந்த அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. மில்லனிய பிரதேச செயலாளரால் அவ்வப்போது மீள்நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது. | அளவிடல் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து மயான நிலங்களைச் சபைக்கு கையேற்றல் வேண்டும். |
| (ii) 154 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்ற காணிகளின் விற்பனைப் பெறுமதியில் 01 சதவீத வரி சபையினால் அறவிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடப்பட்டிருந்தது. | கொடுப்பனவு அடிப்படையில் காணிகள் விற்பனை செய்யப்பட்டமையால் விற்பனைப் பெறுமதியை கண்டறிவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றது. அதனால் மதிப்பீட்டு உத்தியோகத்தரின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 01 சதவீத வரி அறவிடப்பட்டுள்ளது. | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,637,183 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,564,922 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 3,197,440 | 4,433,669 | 4,366,325 | 67,345 | 2,087,100 | 3,542,376 | 3,399,033 | 143,343 |
| (ii) | வாடகை | 402,000 | 218,362 | 218,362 | - | 502,000 | 333,886 | - | 402,000 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,379,050 | 344,090 | 339,590 | 4,500 | 416,300 | 416,300 | 492,610 | 444,610 |
| (iv) | ஏனைய வருமானம் | 39,661,100 | 37,296,591 | 32,847,465 | 4,449,126 | 33,916,800 | 32,643,437 | 19,945,614 | 12,697,823 |
| | மொத்தம் | 44,639,590 | 42,292,712 | 37,771,742 | 4,520,971 | 36,922,200 | 36,935,999 | 23,837,257 | 13,687,776 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,132,028 ஆகவும், முத்திரைக் கட்டணம் ரூபா 11,638,539 ஆகவும் காணப்பட்டது. | பட்டோலைகள் தயாரித்து 2022.12.31 இற்கு முன்னர் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் 2023 மே 01 வரையிலும் ரூபா 6,885,193 கிடைத்துள்ளது. 2021 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 1,005,000 இற்கான பட்டோலை கையளிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் மாதம் ரூபா 803,900 செலவில் ஸ்தாபிக்கப்பட்ட 03 விளம்பர அறிவித்தல் பதாதைகள் 2023 மே 10 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு வருமானத்தையும் உழைத்திருக்கவில்லை. | அறிவித்தல் பதாதைகளை விற்பனை செய்வதற்காக சில நிறுவனங்களுடன் கலந்துரையாடப்படுகின்றது . எதிர்காலத்தில் கூடிய விரைவில் அந்த பதாதைகளை விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பதாதை விற்பனையை துரிதப்படுத்தி வருமானத்தை மீளளிப்புச் செய்வதை துரிதப்படுத்துதல் வேண்டும். |

3. **மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஒட்டுமொத்த பதவியணியினருக்காகவும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்போது அது தயாரிக்கப்படுகின்றது. | ஒட்டுமொத்த பதவியணியினருக்கரகவும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்படல் வேண்டும். |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**
**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 12 கணக்காய்வு விடயப் பரப்புக்கள் உள்ளடக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கணக்காய்வு துறைகள் தொடர்பாக போதியளவான கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் ஆண்டில் 04 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளகக் கணக்காய்வை வலுப்படுத்துதல் வேண்டும். |